உ

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்

(காப்புப்பெற்றது)

## தஞ்சை.

விரோதிகிருது, வைகாசி, க-ல் நிறுவப் பெற்றது. (14—5—1911)

## பதினொன்றும் ஆண்டின் அறிக்கை

இரௌத்திரி (தை)—துன்மதி (மார்கழி)



திரு. வே. இராதாகிருட்டின பிள்ளை, பி.ஏ.,
சங்கம் நிறுவிய துங்கன்.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

ஜெகம் அண்டு கம்பெனி அச்சுக்கூடம், திரிசிரபுரம்.

# காந்தைத் தமிழ்ச் சங்கம்

பழந்தமிழ் பணியும்.

## தமிழ்த் தாய் வாழ்த்து

வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக்
கையி னுலுறை கால மிரிந்திடப்
பைய நாவை யசைத்த பழந்தமிழ்
ஐயை தாடலை கொண்டு பணிகுவாம்.

பழந்தமிழே பணியும்

# காந்தைத் தமிழ்ச் சங்கம்.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

(காப்புப்பெற்றது)

தஞ்சை.

---

## பதினொன்றாம் ஆண்டின் அறிக்கை.

இரோத்திரி (தை)—துன்மதி (மார்கழி).

---

### எண்சீர் ஆசிரிய விருத்தம்.

வானூர்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
மன்னியமூ வேந்தர்கடம் மடிவளர்ந்த மகளே!
தேனூர்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றே
தென்குமரி யாயிடைநற் செங்கோல்கொள் செல்வி!
கானூர்ந்த தேனே! கற் கண்டே! நற் கனியே!
கண்ணே! கண் மணியே! அக் கட்புலஞ் சேர் தேவி!
ஆனாத நூற்கடலை யளித்தருளும் அமிழ்தே!
அம்மே! நின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே! (க)

ஆற்றிடினும் தீயிடினும் அன்பர்தமைக் காத்தே
அவர்வேண்டும் பேறருளும் அன்பே! புன் மாக்கள்
போற்றிடினுந் தூற்றிடினும் பொருள்செய்யாப் பொறையே!
பூவிலிணை மொழியில்லாப் பொலிவுடைய பொற்பே!
மாற்றறியாப் பொன்னே! நன் மணியே! செஞ் சுடரே!
வாடாத மணமலரே! மணந்தருதென் காலே!
ஏற்றவிளங் கோலமொடு என்றென்றும் வாழ்வாய்!
எங் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தினிதுறை செந் தமிழே! (உ)

தமிழ்ப் பெருந்தகையீர் !

நிறை நலப்பெருமான் பேரருட் பெருக்கால், உயிர்திகழ் மொழிகளின் முதனிலைப் பெருமை பொதுவறக் கொண்ட நம் தெய்வச் செந்தமிழ்த் தாயின் திருவடிப் பணிபோற்றும் நம் சங்கத்தினது பதினொன்றாம் ஆண்டு இனிது நிறைவுற்றது. இவ்வாண்டில், வழக்கம்போல், தமிழன்பர்கள் கைம்மாறு கருதாத தாய்மொழித் தொண்டியற்றி, இச் சங்கத்தையே யன்றி இத்தமிழுலகினையும் கடமைப்படுத்திக்கொண்டவாற்றால், பத்தாம் ஆண்டுவிழா முதலிய பல பொதுக்கூட்டங்களும், தொழிற் கூட்டங்களும், கல்லூரி, சுவடிநிலைய நிகழ்ச்சிகளும், பிறவும் ஆகிய சங்க வேலைகள் நன்கு நிகழ்ந்துள. அவையிற்றைச் சுருக்கி மொழிகின்றாம்.

## பத்தாம் ஆண்டின் விழா.

இவ்விழா, துன்மதி, ஆவணி, உ0, உக-ம் நாட்களில் (4, 5–9–21) கரந்தை, திரு. கந்தப்ப செட்டியார் அவர்கள் அறநிலையத்தில், முன்னரே குறித்திருந்தபடி உயர்திருவாளர் சுவாமி வேதாசலனூர் அவர்கள் உடல் நலமின்மையால் எழுந்தருள வியலாது போயினபடியால், இச் சங்கத்தின் காப்பாளர்களுள் ஒருவராய கீழையூர், திருவாளர் சிவ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தலைமையில், தமிழ்ப் புலவரும் தமிழன்பரும் ஆகிய பல் நூற்றுவர் கூட, அமிழ்தினுமினிய தமிழ்த் தெய்வ வாழ்த்துக் கள்பாட, அவைத் தலைவரும் புலத்துறைவரும் தத்தம் விரிவுரை விருந்தினையூட்ட, அவையோர் சிறந்த முடிபுகள் நாட்ட, நன்று நிகழ்ந்தது.

## முடிபுகள்.

க. தமிழ் மொழிக்கென ஒரு தனிப் பல்கலைக் கழகம் (University) இருக்க வேண்டுவது இன்றியமையாததென்று இக் கூட்டத்தார் துணிபுற்று, இம் முயற்சியில் தலையிட வேண்டுமெனத் தமிழ் மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்வதுடன், இதனை மேற்கொண்டு செய்விக்க வேண்டுமென அரசியலாரையும் வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

உ. தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் தமிழ் மொழியைக் கட்டாய மொழியாகக் கற்பித்தல் இன்றியமையாததாகவும், அவ்வாறு கற்பிக்கவேண்டுமெனத் திருவாளர் சத்தியமூர்த்தி அவர்கள் கொண்டுவந்த முடிவை மூதவையார் (Senate) ஒப்புக்கொள்ளாது போனதுபற்றி இச் சங்கத்தார் மிக்க வியப்பும் வருத்தமும் அடைவதுடன், இனியேனும் உடனே தமிழைக் கட்டாய பாடமாகச் செய்ய வேண்டுமென்று சென்னைப் பல்கலைக் கழகத்தாரையும் ஆட்சியாளரையும் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

ரு. தென்னாட்டிலுள்ள பெரு மடங்களிலும் பழம் புலவர் இல்லங்களிலும் அரண்மனைகளிலும் இன்னும் வெளிவராத தமிழ் நூல்கள் பல விருப்பனவாகத் தெரிகின்றமையால், அவைகட்கு ஒரு அட்டவணை குறிக்கும் பொருட்டு, நூல்களை வைத்திருப்போர்களை அவற்றின் பெயரை இச் சங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதுடன், தங்கள் பொறுப்பை உணர்ந்து அவற்றை வெளியிட வேண்டுமென மடத்தின் தலைவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

ச. இச் சங்கத்தைச் சார்ந்த 'செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி'யைத் தக்கபடி விரிவாக நிலைபெற நடத்துதற்கும். தமிழ் மொழியின் மேன்மையைப் பேணுதற் பொருட்டாகத் 'தமிழ்ப் பொழில்' என்னும் திங்கட்டாளை வெளியிடுதற்கும் தக்கவாறு பொருளுதவி செய்ய வேண்டுமெனத் தமிழ் மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

## சொற்பொழிவுகள்.

'கந்தழி'— திரு. பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், திருச்சிராப்பள்ளி.

'தமிழிலக்கியம்'—திரு. பண்டிதர் மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

'பழந் தமிழகப் பெண்கல்வி'—திரு. அலர்மேல் மங்கையார் அவர்கள், சென்னை.

'மெய்ப்பொருள்'—திரு. தெ. அரு. சித. இராமநாதச் செட்டியார் அவர்கள், கண்டனூர்.

'பண்டைத் தமிழர் வாணிகமும் கைத்தொழிலும்'— திரு. திவான் பஹதூர் எல்.டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை அவர்கள், எம்.எ., பி.எல்., எல்எல்.பி., எப். எம். யூ. ஐ. எஸ். ஒ., சென்னை.

'தமிழே தமிழ்'—திரு. பா. வே. மாணிக்கம் நாயக்கர் அவர்கள், பி.இ., எம்.சி.ஐ., திருச்சிராப்பள்ளி.

## உறுப்பினர்.

இவ்வாண்டின் தொடக்கத்தே நம்சங்கத்தே இருநூற்று நாற்பத்தெழுவர் உறுப்பினர் இருந்தனர். இவ்வாண்டிற் சேர்ந்தார் ஐம்பத்தெண்மர். விலகினர் இருபத்தெழுவர். உலகவாழ்வினைத் துறந்தார் எழுவர். எனவே, இதுபோது உள்ளவர் இருநூற்றெழுபத்தொருவர். (சேர்க்கை ச.)

இவ்வாண்டிற்சேர்ந்த வாணாள் உறுப்பினர் நால்வர். அவராவார்:

க. திருவாளர் இராம. பஞ்சநதம் பிள்ளை அவர்கள்,
கொடுக்கல் வாங்கல், தஞ்சை.

உ. ,, ராய் பகதூர் R. N. ஆரோக்கியசாமி முதலியார் அவர்கள், B. A., B. E., பொதுவேலைக் கண்காணிப் பொறிவலாளர் (Superintending Engineer), சென்னை.

ரு. ,, ராம. குமட. சு. குமரப்பச் செட்டியார் அவர்கள்,
கொடுக்கல் வாங்கல், பலவான்குடி.

௪. ,, பா. வே. பொன்னுசாமி நாயக்கர் அவர்கள்,
நிலக்கிழவர், பாகல்பட்டு.

உள்ளூர் வெளியூர் உறுப்பினர்கள் தம்மைப்போன்று தம் அன்பர்களும் இந் நன்முயற்சியில் ஈடுபடும்படி செய்து சங்கத்தை மேலும் மேலும் வளம்படுத்துவார்களாக.

## கூட்டங்கள்.

இவ்வாண்டில் நிறைவேற்றுக் கழகத்தார் கூட்டம் பதின்மூன்றும், உறுப்பினர் தொழிற் சூழ்ச்சிக் கூட்டம் இரண்டும், பொதுக்கூட்டங்கள் பதினேழும் நிகழ்ந்தன. பொதுக்கூட்டங்களின் விபரம் சேர்க்கை (ரு)யில் காண்க.

## சுவடி நிலையம்.

இவ்வாண்டின் தொடக்கத்தே இந்நிலையத்தே உள்ள சுவடிகள் ௲௱ருக. இவ்வாண்டில் சங்கத்தில் விலைக்கு வாங்கியனவும் சங்கத்திற்கு வந்த தாள்களைத் தொகுத்தனவுமாகச் சேர்ந்தன ௱௰ரு. அன்பர்கள் நன்கொடையளித்தன உசுயி (சேர்க்கை உ). ஆக இப்போது இந்நூல் நிலையத்தே இருப்பன ௲௬௱௪. இவ்வாண்டில் இந்நிலையத்தே சுவடிகள் எடுத்துப் படித்தவர்கள் அறு நூற்றின் மிக்காராவர்.

இச் சுவடிநிலைய மேற்பார்வைப் பொறுப்பினைத் திருவாளர் அ. பொன்னண்ணக் களத்தில் வேன்றர் அவர்கள் கைக்கொண்டுள்ளார்கள். சங்கச் சுவடி நிலையத்திற்கு மனமுவந்து நூல்கள் உதவிய உண்மைத் தமிழன்பர்கட்கும், கைம்மாறு கருதாது அந்நிலைய மேற்பார்வையினை ஆற்றிவரும் திருவாளர் களத்தில் வேன்றர் அவர்கட்கும் சங்கம் மனமார்ந்த நன்றி யுணர்வைத் தெரிவித்து வாழ்த்துகின்றது.

## செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி

கடந்த ஐந்தாண்டுகளாக நிகழ்ந்து வரும் இக்கல்லூரி இதுகாலை அறுபத்தைந்து மாணவர்களையும் நான்கு ஆசிரியர்களையுங் கொண்டு நிகழ்கின்றது. செந்தமிழ்க் கல்வியோடு ஆங்கிலம், கணக்கு முதலிய ஏனையவற்றையும் திருத்தமாகப் பயிற்றிவரும் இக்கல்லூரி இவ்வாண்டிலே தான் இந்நகரமாந்தர்களின் அருட் பார்வைக்குச் சிறிதே இலக்காகும் பேற்றினையடையத் தொடங்கியுளது. எனினும், இக்கல்லூரியின் சிறந்த நோக்கத்தினையும், இதனால் விளைந்து வரும் நன்மைகளையும் இந்நகர மாந்தர் நன்கு அறிந்திலர் என இவ்வாண்டினும் குறியாது விடுதற்கில்லை. அறக்கல்விச்சாலை என்ற அளவில் அதனைக் குறைத்தெண்ணும் உலக வழக்கம் நாளடைவிலே குறைந்தொழிய வேண்டுதலின் இந்நகரத்துச் செல்வரும் பிறரும் இக்கல்லூரியின் தகவினை மெல்ல மெல்ல அறிந்து வருதலைக்கண்டு நாம் வியந்து ஒன்றுங் கூறுதற்கில்லேம். இதன் நலங் குறித்துத் திருவருளைச் சிந்தித்திருத்தலே சாலுவதாகும்.

இக் கல்லூரியின் ஆசிரியர்கள் தத்தம் பாடங்களினும் ஈதன் மரபிலும் வல்லுநராய், ஒற்றுமை, ஊக்கம், மாணவரிடத்து அன்புடைமை முதலிய குணங்கள் தோன்ற நன்கு பயிற்றிவருகின்றனர். இவர்கட்கு நம் நன்றியறிவினைத் தெரிவிக்கின்றோம்.

இக்கல்விச் சாலையின் மேற்பார்வையினைத் திருவாளர் எம். எஸ். கலியாண சுந்தரமையரவர்கள் தமக்குரிய பற்பல வேலைகட்கிடையிடையே பார்த்து வருகின்றனர். கைம்மாறு கருதாத இவர்கள்பால் சங்கம் என்றும் மறவா நன்றியறிவினை யுடையது.

இக் கல்லூரியின் ஆணிவேர் அனையாராகிய நம் அருட் பெருந்தகையார்—தலைவர்—வழக்கம்போல், திங்கடோறும் இருபத்தைந்து ரூபா அளித்து வருவதோடு, ஏனைப் பல்வகைய உதவிகளையும் செய்து வருகின்றனர். நீடு வாழ்வார்களாக!

இக்கல்லூரிக்கு உரிய ஏனை வருவாயாவன :—கல்வியிலாக்காதார் ஆண்டிற்காண்டு அளித்துவரும் பற்றுச் சிற்றுதவியும். கரந்தை வணிகர் சிலச் சிலர் பை பையாக அளித்துவரும் பனைத்துணையுதவியுமாகும். இன்னோரன்னோர்க்கும் எம் நன்றியறிவு தெரிவிக்கின்றோம்.

இக்கல்லூரியின் மேம்பாட்டில் மனங்கொண்ட மாண்பினராகிய திருவாளர் த. பீ. சோமநாத ராவ் அவர்கள் இவ்வாண்டில் தேர்ச்சியில்

முதன்மையில் நின்ற மாணவர்கட்கும் அதிகநாள் வந்து பயின்றிருப்போர்க்கும் பல நூல்களைப் பரிசிலளித்தார்கள். நம் சங்கத்துப் பேரன்பினராகிய இத்திருவினருக்கு எல்லாப் பேறும் எய்துவனவாக!

## பரிசில் பெற்றோர் விபரம்.

| வகுப்பு. | முதற் பரிசில். | இரண்டாம் பரிசில். | மிகுதி நாள் வந்தமைக்குப் பரிசில். |
|---|---|---|---|
| ச | தி. சுப்பையா | ச. அரங்கசாமி | அ. சுப்பிரமணியன் |
| ௩ | க. சுப்பிரமணியன் | சு. சாரங்கபாணி | ப. சிவஞானம் |
| உ | தங்கவேலு | P. கோவிந்தராசன் | தங்கவேலு |
| க | இராசுப் பிள்ளை | நாகரத்தினம் | இராசுப் பிள்ளை |

அன்பர்களே!

நம் சங்கம் தனக்குரிய பற்பல துறைகட்கிடையே திங்கள் ஒன்றுக்கு ஒரு நூறு ரூபா அளவிற் செலவிட்டு இக்கல்லூரியினைப் போற்றி வரும் உயர் நோக்கத்தினை அறிவார் இலையே! தெய்வங் கொள்கை, சீரிய ஒழுக்கம், செந்தமிழ்ப் பயிற்சி முதலியவற்றை இக்காலத்து வேண்டுங் கலையறிவோடு சேர்த்துப் புகட்டிவரும் இக்கல்லூரியின் பெருமையினைத் தெரிவார் இலையே! தெரிந்து உதவி புரிவார் இலையே! ஏழை மாந்தரின் மக்கள் தெருத்தெருவாகத் திரிந்து தங்கள் மக்கட் பிறப்பினைப் பாழ்படுத்திக்கொள்ளாது அவர்கள் கண்களைத் திறந்து அவர்களை அறிஞர் உலகமென்னும் நல்லுலகத்திற் செலுத்தும் நல்லாசிரியனாகிய இக்கல்லூரியின் அறமேம்பாட்டினை உணரும் மக்கள் இலரே! உணர்ந்து தங்கடமையை ஆற்றுந் தக்கார் இலரே! ஓ, வணிகர்களே! வழக்கறிஞர்களே! தாளாளர்களே! நிலக்கிழவர்களே! கைத்தொழிலாளர்களே! உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இருக்கையும், கற்கக் கல்வியும் ஏழை மாந்தர்க்குத் தந்துதவும் கல்லூரியினுங் காட்டிற் சிறந்ததோர் அறம் உண்டுகொல்லோ? உங்கள் அருட்பெருக்கு இக்கல்லூரியின்பாற் சிறிது சிறிது பாயுமெனினும் இக்கல்லூரி அத்தகைப் பெருங்கல்லூரியாதற்குத் தடையுண்டோகொல்?

அறப் பெருஞ்சீலர்களே!

ஓர் ஐந்தாண்டுச் சிறுவன் உங்கள் ஒவ்வொருவர் திருமுன்னும் தனது செந்தாமரைத் திருக்கையினை எந்தித் தளர்கின்றனனே! உங்கள் அருட்கண்ணிற் புலப்பட்டிலனே! பிறந்தநாள்தொட்டுத் தன்போன்ற எளிய இளஞ்சிறார்க்குக் கல்விப்பால் ஊட்டும் அறக்கிழவன் ஆகிய இச் சிறுவன் தன் பைங்குதலைத் தேன்மொழியால் மெல்லெனச் சொல்லுவதை உற்றுக்கேண்மின்! ஆயிரமாகாணி அறுபத்திரண்டரை அவன் கூறுவது. செந்தமிழ்ச் சீரியீர்! இச்சிறுவன் உரையை நும் செவியகத் தேந்தி மகிழ்ந்து செய்வன செய்ம்மின்!

பெரியோர்களே!

கடந்த ஐந்தாண்டுகளாக நம் அறிக்கைகளில் இக்கல்லூரியின் பெயர் செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி என்று காணப்படுவதனையும், கைத்தொழிற் பயிற்சி எங்ஙனமும் தொடங்கி நடத்துவதென்னும் உறுதியுடன் முதற்பொருளுக்காக முழுமுதற் பொருளை எண்ணி வழுத்தி வருவதையும் கண்டுவருகின்றீர்கள். இவ்வாண்டில் ஏதேனும் சிறிதொன்றையாதல் தொடங்கி நடாத்த முடிவுகொண்டிருந்தும் நம் கல்லூரி திருவருட் பெருக்கால் விரிந்து வேறுசில ஆசிரியர்களை வேண்டினமையான், எல்லாச் செலவுகளையும் ஒருசேர எற்றுக்கொள்ளல் இயலாமற் போயிற்று. அடுத்த ஆண்டில் நம் செந்தமிழ்த் தெய்வம் கூட்டி வைக்கும் என்னுந் துணிபுடையேம்.

பெருகார்வ மோடு முனைநாளை மன்னர் பிரியாத தொண்டு
செயலாலே
பெரியோர் புலத்த முதியோர் நலத்த பெருநூற் கலன்கள்
தரலாலே
ஒருகால் தனக்கே யிணையார் கொலென்ன உறுபோர் தொடுத்த
ஒருமாதும்
உலகோர் வழக்கும் அறவே செருக்கும் ஒழிகிற்க வென்ற
முதலாயே!
மருவார் தடத்த மலிமேடை மீது மணமோடு வந்த
சிறுகாலே!
மதியே! மதித்தகண் வளமே! யெமுன்னம் மகிழ்வித்து நிற்கும்
ஒருதேவே!
திருவார் கரந்தை நகரேய தொண்டு திகழ்கின்ற சங்கம்
அதுமேவி
தினநூறு நூறு மகவோர் தமக்குச் செழுநூலளித்து
வளர்வாயே!

## இலவசப்படிப்பிடம்.

இச்சங்கத்தைச் சார்ந்ததாய் யாவர்க்கும் நன்கு பயன்பட்டு வரும் இப் படிப்பிடத்திற்கு இதுகாலை. க. திராவிடன், உ. ஞானசாகரம், ௩. நல்லாசிரியன், ௪. Madras Mail என்கிற தாள்கள் வருகின்றன. இவற்றொடு நம் தலைவர் அவர்களால், ரு. Justice, சு. தமிழர் நேசன், எ. செந்தமிழ் என்னும் தாள்கள் அளிக்கப் பெறுகின்றன. மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் மனமுவந்து வழக்கம்போல் அ. செந்தமிழ் அனுப்பி யருள்கின்றனர்.

தஞ்சை நகராண்மைக் கழகத்தார் ஆண்டுதொறும் தந்துவந்த நூறு ரூபாவினை அனுப்பிவருவார்கள் என்று எதிர்நோக்கியுள்ளோம்.

## வருவாய்.

நம் சங்க உறுப்பினரும் சங்கத்தே அன்புடைய பிறரும் அளித்து வரும் வரி, நன்கொடைகளே இதுபோது நம் சங்கத்துப் பொருள் வருவாயாகும். இவைகள் நம் சங்க நோக்கங்கட்கு உரிய பல துறைகளும் நிகழ்வதற்குப் போதியன ஆகா. எனினும், திருவருள் இத்தகைய வருவாய்களை ஆண்டிற்காண்டு விரித்து வருதலின், யாம் தொடங்கிய துறைகளைச் சுருக்காது தாங்கி நடாத்துவதொடு, தொடங்க வேண்டுவனவற்றையும் தொடங்க எண்ணியுள்ளோம்.

ஆண்டு தொறும் அறிக்கைகளில், தமிழ் மக்கள் எல்லோரும் தாய்மொழி புரத்தலாகிய தத்தங் கடமைகளை உணர்ந்து என்னுனும் தமது மனமுவப்பப் பெற்றதை ஈந்து வரல் வேண்டுமென வேண்டுகோள் வெளிவந்ததை அன்பர்கள் அறிவர். அங்ஙனமே இவ்வாண்டிலும் வெளிவரும் வேண்டுகோளை அன்பர்கள் அருள் கூர்ந்து நோக்கி ஆவன செய்வார்களாக.

அன்பர்காள்!

நமது செந்தமிழ்த்தாயின் ஆக்கத்திற்பேரன்புடையார்களாய சில அன்பர்கள் சென்ற சில ஆண்டுகளாகத் தம் இல்லங்களில் நிகழும் நல நேர்ச்சி முதலிய வற்றில் தமது பேரன்னையாரை நினைவு கூர்ந்து இயன்ற உதவி வருகின்றார்கள். இம்முறை ஏனையோர்க்கும் வழி காட்டுதலாகிய ஓர் நன்முறையாகும். இவர்கள் திறத்துச் சங்கமும் தமிழகமும் நன்றிபாராட்டும் கடமையுடைய. இங்ஙனம் இவ்வாண்டில் பொருளுதவி செய்தோர் வகை பின்வருமாறு:

திருவாளர் R. அருணசலம் பிள்ளையவர்கள், திருச்சிராப்பள்ளி,
மகள் திருமணம் ரூ. ய

,, K. கிருஷ்ணசாமி பிள்ளையவர்கள், ஆலங்குடி,
மகன் திருமணம் ,, ய

,, T. S. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள், கரந்தை,
தம் திருமணம் ,, ரு

,, T. P. நடராசப் பிள்ளையவர்கள்.
திருச்சிராப்பள்ளி, தம் திருமணம் ,, ரு

,, கலியப்பெருமாள் பிள்ளை அவர்கள், திருச்சிராப்பள்ளி,
மகள் திருமணம் ,, ரு

,, ச. சந்திரசேகரம் பிள்ளையவர்கள், கரந்தை,
மக்கள் காதணி மங்கலம் ,, ரு

,, அருணசலம் பிள்ளையவர்கள், கரந்தை,
மகன் காதணி மங்கலம் ,, ரு

,, D. கந்தசாமி பிள்ளையவர்கள், கரந்தை,
தம்பியார் பிற்கடன் ,, உ

,, R. சிவகடாட்சம் பிள்ளையவர்கள், இடைக்கியம்,
தந்தையார் நாள் ,, உ

,, N. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், திருச்சிராப்பள்ளி,
நற்றாய் நாள் ,, உ

,, தண்டமிழ்த் தொண்டன் நற்றாய் நாள் ,, க
தந்தையார் நாள் ,, க

,, கோவிந்தசாமி பிள்ளையவர்கள், வல்லம்,
தம்பியார் மகள் திருமணம் ,, க

இவ்வாண்டில் நம் சங்கத்திற்குப் பத்தும் பத்துக்கு மேற்பட்டும் நன்கொடை அளித்த திருவினர்:

திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B.A., B.L.,
கல்லூரிக்கெனத் திங்கள் ரூ. உரு ஆக ரூ. ௩௱

,, திவான்பகதூர் சா. ராம. மு. சித. பெத்தாச்சிச்
செட்டியார் அவர்கள், எம். ஆர். ஏ. எஸ்., ,, ௱

,, ராவ்பகதூர் வீ. அப்பாசாமி வாண்டையார்
அவர்கள், M.L.C, ,, ருக

,, இராம. பஞ்சநதம் பிள்ளை அவர்கள்,
கொடுக்கல் வாங்கல், மகர்நோம்புச்சாவடி ,, ருய

திருவாளர் இராமநாதன் செட்டியார் அவர்கள்.
கொடுக்கல் வாங்கல், மகர்நோம்புச்சாவடி. .. ௫0
,, ச. சபாபதிப் பிள்ளை அவர்கள், எண்ணெய்
வணிகர், சென்னை. ,, ௨௫
,, ராய்பகதூர் T. A. இராமலிங்கச் செட்டியார்
அவர்கள், B.A., B.L., M.L.C., கோயமுத்தூர் .. ௧0

## துயரம்.

தமிழ்ப் பெரும் புலவரும் தமிழ்ப் பெருந் தொண்டருமாகிய திரு. செல்வக்கேசவராய முதலியார் அவர்கள், M. A.. தமது தமிழ்த்தாய் நாட்டினை விட்டு விண்ணோர் விருந்தினராக எய்தியமைக்கு இச்சங்கம் பெரிதும் வருந்துகின்றது. நம் சங்க உறுப்பினருள் பிற்கண்ட எழுவரை இழந்து சங்கம் பெரிதும் துயர் கூர்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| திரு. | அ. சுப்பையா பிள்ளை | அவர்கள், | அறந்தாங்கி. |
| ,, | ச. சி. பஞ்சநதம் பிள்ளை | ,, | கும்பகோணம். |
| ,, | தி. செ. இராமசாமி பிள்ளை | ,, | தனுக்கோடி. |
| ,, | த. ச. புருடோத்தம பிள்ளை | ,, | தஞ்சை. |
| ,, | வை. புருடோத்தம பிள்ளை | ,, | கரந்தை. |
| ,, | P. V. நடேச பிள்ளை | ,, | கோயிலடி. |
| ,, | இரா. காளத்தி ஐயர் | ,, | தஞ்சை. |

## திரிசிரபுரம் கிளை.

சங்கத்தின் தோன்றாத் துணைவர்களாக அமைந்துள்ள நண்பர் பலரை உறுப்பினராக் கொண்டுள்ள இக் கிளைச்சங்கம், தாய்ச் சங்கத்திற்குப் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. இதனைச் சார்ந்து சங்கத்தை ஊக்கிவரும் பல அன்பர்களுக்கும் சங்கத்தின் உளமார்ந்த நன்றியைப் பாராட்டுகின்றோம். இதன் முயற்சித் திறங்களைச் சேர்க்கை (க) யில் காண்க.

## மகிழ்ச்சி.

இவ்வாண்டில் மாட்சிமிக்க வேல்ஸ் இளவரசுப் பெருமான் (H. R. H. The Prince of Wales) நம் நாட்டிற்கு எழுந்தருளியது பற்றியும், அப்பெருமான் நமது செந்தமிழ்ப் புலவர் பெருமக்களுட் சிலர்க்குத் தமது திருக்கரத்தால் பெறலரும் பெரும் பரிசில் அளித்தது பற்றியும் இச்சங்கம் தனது பெருமகிழ்ச்சியை உறுப்பினர் பெருங் கூட்டத்தில்

வெளியிட்டு அம்மகிழ்ச்சி முடிவினை மாட்சிமிக்க இளவரசுப் பெருமானுக்குத் தெரிவித்தது. அதனோடு, அப்பரிசில் பெற்றாருள் இச்சங்க உறுப்பினராய நல்லிசைப்புலவர் திருவாளர் பண்டிதர் எல். உலகநாத பிள்ளை அவர்கட்குத் தனது மிகுமகிழ்ச்சியினை உரிமை அன்பினோடு தெரிவித்துளது.

இச்சங்கத்தின் காப்பாளராகிய அறச் செல்வர் சா. ராம. மு. சித. பெத்தாச்சிச் செட்டியாரவர்கள் திவான் பகதூர் என்னும் பட்டம் எய்தியமைக்குப் பெரிதும் மகிழ்ந்து, அப்பெருங் கொடைப் பெருஞ் செல்வர்க்கு ஏற்றமிக்க சிறப்புக்கள் எல்லாம் எய்தவேண்டுமெனத் திருவருளைச் சிந்தித்துளது. இச்சங்கத்தின் உண்மையன்பினர்களுள் ஒருவராய திருவாளர் T. A. இராமலிங்கச் செட்டியாரவர்கள் B. A., B. L., M. L. C., ராய் பகதூர் பட்டம் பெற்றமைக்கு மகிழ்ந்துளது இன்னோர் எல்லாப் பேறுகளும் பெற்று நீடு வாழ்வார்களாக.

## வெளியீடு.

இவ்வாண்டில், பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் எழுதி முடித்த கபிலர் என்னும் அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்துளது. திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கரவர்களால் எழுதப்பெற்ற 'அஜ்ஞாநம்' என்னும் அரிய தத்துவக் கட்டுரை அச்சிலிருந்து வருகின்றது. விரைவில் வெளிவரும். தொல்காப்பியம் சொல்லதிகாரம் பேராசிரியர் உரையை அச்சிடத் திருவாளர் R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் வேண்டுவன செய்துவருகின்றார்கள். விரைவில் வெளிவரும்.

இவ்வாண்டில் 'தமிழ்ப் பொழிற்'குப் பங்குத்தொகையுதவியார்:

திரு. வேணுகோபால நாயுடு அவர்கள், B.A., B.L.,
பட்டுக்கோட்டை ரூ. ௧௧

,, T. நாராயணசாமி பிள்ளை அவர்கள்,
திருச்சிராப்பள்ளி ,, ௧௫

## பொது நிகழ்ச்சிகள்.

நம் சங்கத்துப் பேரன்பினராகவிருந்து சிறந்த தமிழ்த் தொண்டியற்றி வந்த திரு. சிங்காரவேலு முதலியாரவர்களை ஆண்டுதோறும் நினைவு கூர்தற் பொருட்டு, அவர்தம் மகனார் திருவாளர் சோமசுந்தர முதலியார் அவர்கள் தமிழ் மொழியில் சிறந்ததொரு கட்டுரை எழுதுவார்க்கு ரூபா பதினைந்து பரிசில் அளித்து வர எண்ணி அதனை நடத்தி

வருமாறு சங்கத்தினை வேண்டிக்கொண்டனர். அதற்காக முதல் ஆண்டிற்கு ரூபா பதினைந்து தந்துளர். அங்ஙனம் அன்னார் பொருளுதவி செய்து வருவதாயின் அவ்வலுவலை மேற்கொண்டு நடத்துவதெனமுடிவு செய்யப்பட்டமையின், இவ்வாண்டிற்குத் தமிழும் தமிழ் மக்களின் சிறப்பும் என்பது பொருளாகச் சிறந்த கட்டுரை எழுதுவார்க்கு ரூபா பதினைந்தில் ஓர் பரிசில் அளிக்கப்படுமெனச் சங்கத்தார் விளம்பரஞ் செய்தனர். எண்மர் கட்டுரை எழுதினர். அவர்களுள் திருவனந்தபுரம் திரு. உ. க. உலகநாத பிள்ளையவர்கள், திருச்சிராப்பள்ளி திரு. மு. கோவிந்த ராச நாட்டாரவர்கள் ஆய இருவர் கட்டுரைகளும் ஒத்த சிறப்பினவாய் முதன்மை பெற்று நின்றமையின், சங்கத்திலிருந்து ரூபா பதினைந்து சேர்த்து அவ்விருவருக்கும் பரிசிலளிப்பதென எண்ணியுள்ளேம். இங்ஙனமே ஆண்டுதோறும் இந் நன் முயற்சி நிகழ்ந்து வருமாறு திருவாளர் முதலியார் அவர்கள் பொருள் உதவி செய்துவந்து புகழுறுவார்களாக.

இனி, கரந்தையம் பதியிலுள்ள சங்க உறுப்பினருள் ஒருவராய திருவாளர் அ. சதாசிவம் பிள்ளையவர்கள் தாம் அரிதிற் போற்றி வரும் கணேசர் சபை நிகழ்ச்சிகளைச் சங்கத்தின் சார்பில் விட்டுவிட எண்ணி வேண்டினார்கள். அவர்கள் குறித்தபடி பொருள் வருவாய் செய்து தருவரேல், இயன்றன மேற்கொண்டு நடாத்துவதென முடிவு செய்யப்பட்டுளது.

மாட்சிதங்கிய சென்னை மாகாணத்திற் கிறைவர் (H. E. The Governor of Madras) நம் தஞ்சை மாநகர்க்கு வந்தபோது நம் சங்கத்தின் சார்பாகத் திருவாளர் ராவ் பஹதூர் வீ. அ. வாண்டையார் அவர்கள், எம். எல், சி; முதலியோர் அவர்களைக் கண்டு அடியிற் கண்ட முடிபுகளை நன்கு எடுத்துரைத்து வலியுறுத்தனர்.

க. வேண்டல். நம் செந்தமிழ் மொழியை ஓர் உயர்தனிச் செம்மொழியென ஒப்பல் வேண்டும்.

விடை. உயர்தனிச் செம்மொழி யென்பது உலகவழக்கு (பேச்சு வழக்கு) ஒழிந்ததோர் மொழியாக இருக்கவேண்டும்.

உ. வேண்டல். நாட்டுமொழிப் பட்டத்தேர்ச்சிகளில் (Oriental Titles Examinations) தமிழின் நிலை உயரவேண்டும்.

விடை. இத் தேர்ச்சியால் தமிழ்மொழிக்கும் மற்றைமொழிகட்கும் வேற்றுமை பாராட்டப்படுவது ஆராயப்படும்.

ங. வேண்டல். பள்ளிக்கூடங்கட்கும் கல்லூரிகட்கும் தமிழைக் கட்டாய பாடமாக்கவேண்டும்.

விடை. ...........

ச. வேண்டல். தமிழ்ப்பண்டிதர்களின் ஊதியமுதலியவற்றை உயர்த்தவும். அவர்கட்குப் பழக்கக் கல்லூரி (Training College) ஏற்படுத்தவும் வேண்டும்.

விடை. பண்டிதர்களின் வருவாய் உயர்த்தப்பட்டுள்ளது; உயர்த்தவும் படும். அவர்களுக்குப் பழக்கக்கல்லூரி அமைக்க எண்ணமும் முயற்சியும் உண்டு.

ரு வேண்டல். திராவிட மொழிகளின் முன்னேற்றத்தில் உண்மைக் கருத்துடையோர்களையே அம்மொழிகளின் பிரதிநிதிகளாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தவும், அங்ஙனம் ஏற்படுத்துவதில் இச்சங்கம் போன்ற மொழிவளர்ச்சிக் குரிய சங்கங்களின் எண்ணம் மதிக்கப்படவும் வேண்டும்.

விடை. உற்றுழி ஏற்றன செய்யப்படும்.

சு. வேண்டல். மொழிவளர்ச்சிக்குரிய சங்கங்களை, நன்கொடை. அரசாங்கத்தார் வெளியிடும் நூல்கள் முதலிய உதவிகளைச் செய்து ஊக்கி வரல் வேண்டும்.

விடை. அங்ஙனே செய்யப்படும்.

## நன்றிபாராட்டல்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் தமிழ்மொழி போற்றலே தமது தலைக்கடனாகக் கொண்டவரும், நமது சங்கத்தின் புரவலருமாகிய ஆண்டிப்பட்டியாளர் திரு. திவான்பகதூர் சா. ராம. மு. சித. பெத்தாச்சிச் செட்டியாரவர்கள், எம். ஆர். ஏ. எஸ்; தாம் வேறு தமிழ் வேறு என்னும் வேற்றுமையில்லாது தாமே தமிழாய்த் தழைத்திடும் நமது சங்கத்தின் மற்றொரு புரவலர் கீழையூர், திரு. சிவ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்; தாம அரிதிற் கற்றுத் தேர்ந்த நுண்பொருள்களை உலகுக்கு அடிக்கடி உவப்பொடு ஊட்டி வரும் தமிழ் வள்ளலாகிய திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள், பி.இ.. எம்.ஐ.ஐ.; நம்சங்கத்திற்குப் பலவகையாலும் உதவிபுரிந்து வரும் திருவாளர் ராவ்பகதூர் வீ. அப்பாசாமி வாண்டையார் அவர்கள், எம்.எல்.சி., எஸ். எல். முத்துசாமி உடையார் அவர்கள்; சங்கக் கட்டிடம் உதவி வரும் திருவாளர் வா. கோவிந்தராசலு நாயுடு அவர்கள், தாம். முதுமையால் தளர்வுற்று; மெலிந்திருக்கும் நிலையிலேயும், தமிழிடங் கொண்ட ஆர்வ மிகுதியால் தாம் நுண்ணிதின் ஆய்ந்து கண்ட பொருள்களை உலகறியச் செய்து உவத்தலையே பெருங்கடனாக்கொண்டு "தமிழ் வரலாறு" என்னும்

அரிய ஆராய்ச்சி யுரையைப் பரப்பிவரும் திருவாளர் ராவ் பகதூர் கே. எஸ். சீனிவாச பிள்ளை அவர்கள், முதலிய திருவினர் கட்கெல்லாம் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தமது பொருள் பொழுது முதலியவெல்லாம் தமிழ்த் தாய்க்கே உரிமையாக்கித் தமிழ்த் தொண்டுக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் எமது அருமைத் தலைவரவர்கள்; திரு. ஐ. குமாரசாமி பிள்ளை அவர்கள், பி. ஏ., திரு. த. பீ. சோமநாதராவ் அவர்கள், திரு. சி. தட்சிணாமூர்த்திப் பிள்ளை அவர்கள், திரு. ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், திரு. எம். எஸ். கலியாணசுந்தரம் ஐயரவர்கள், திரு. ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்கள், பாரிஸ்டர், திரு. டி. என். குருமூர்த்திப் பிள்ளை அவர்கள், திரு. வே. இராமசாமி வன்னியர் அவர்கள், பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்; நமது சங்கக் கல்லூரியின் வளர்ச்சியில் பெருநோக்கங்கொண்டு ஊக்கிவரும் திரு. மா. வே. கோபாலகிருட்டினையர் அவர்கள்; நம் சங்கத்தின் உதவி அமைச்சராக விருந்து சங்கத்தின் பொருள் மேம்பாட்டைப் பொன்னெனப் போற்றித் தமது ஒழுகலாற்றாற் பெரும் புகழ்பெற்ற திரு. கோ. சுப்பராய பிள்ளை அவர்கள்; அமைச்சராயிருந்து நம் சங்க அலுவல்களைத் திறம்பட முற்றிவைத்த திருவாளர் பா. கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள்; நிறைவேற்றுக்கழக உறுப்பினராக அமைந்து, சங்க முன்னேற்றத்தைப் பெரிதும் போற்றி வந்த திரு. க. சண்முகம் பிள்ளை அவர்கள், பி. ஏ.; சங்கத்தே வேண்டுங்கால் சொற்பொழிவாற்றல் தலைமை தாங்கல் முதலிய தொண்டுகளியற்றிய ஏனைய நண்பர்கள்; நம் சங்கப் பதிப்பு வேலைகளை வேண்டிய வேண்டியாங்கே சலிப்பின்றி மனமுவந்து, அழகுபெறச் செய்துவரும் திருச்சிராப்பள்ளி டாட்சன் அச்சுப்பொறி (Dodson Press) யுடையார் திருவாளர் வி. பீ. சகந்நாத பிள்ளை அவர்கள்; முதலிய தமிழன்பர் பலருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## வேண்டுகோள்

செந்தமிழ்ச்சீரியீர் !

'ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே'

என்பதை யுணர்ந்து ஆண்டுதோறும் நமது சங்க விழாவில் வெளியிடும் அறிக்கையி னிறுதியில் தமிழ் மொழிக்கு நாம் எத்துணைக் கடமைப் பட்டுள்ளோம் என்பதை எடுத்துக்காட்டி, அம்மொழியின் தற்கால நிலையும், இனி அது பெரிதும் விளக்க முறும்படி நாம் ஆற்ற வேண்டிய

செயல்களும் இன்னவை யெனச் சுட்டித் தமிழ் மக்களுக்கு அவர் தம்மாலியன்றவரை பணியாற்றுமாறு வேண்டுகோள் வாயிலாக இரக்குங் குறையொன்றுள்ளோம்.

எத்தகைய சீர்திருத்தமும் அதை வேண்டிய மக்களுள்ளத்தே தோன்றி, அவர் தந் தனியாற்றலானே ஈடேறவேண்டுமெனத் துணிந்த அளவானே அவருக்கு ஊக்கம் உண்டாம். பெரும்பாலோர்க்கு அத்தகைய ஊக்கம் இயற்கையிலுண்டாதலரிது. உண்மை யறிந்தோர் செவியறிவுறூஉவாக அவருக்கு எடுத்துக்காட்டின் மனவலி மிகுந்து கொண்ட பொருள் திண்ணிதின் முடிக்கும் ஆற்றலுடையராவர். தமிழ்மொழி இதுபோது நிற்கும் நிலைபற்றிப் பல திருத்தங்களும் இன்றியமையாதன வாயிருக்கின்றன. அவற்றை நன்குணர்ந்து தாமாகவே பல்வழிகளிலும் மொழியின் ஈடேற்றத்திற்காக முயலும் பெருமக்களது எண் மிகச்சிறிதாயிருக்கிறது. அதுபற்றியே, தமிழன்பர் அனைவருக்கும், 'நமது முன்னோர் அவர் மொழியைத் தமது உயிரும், அதனோடு மூத்து அதனினுஞ் சிறந்த தம்புகழையும்போற் போற்றி வளர்த்தனர்; நமது கடமையும் அதுவே' யென்பது அறிவுறுத்த இவ்வேண்டுகோள் முதன்மையானதாகின்றது.

அமிழ்தினு மினிய நந்தமிழ் மொழியை அதன் உயர் துறைகளிற் கற்றாரைக் காணுவது நாளுக்கு நாள் முயற் கொம்பாகு மென்பது திண்ணம். அதற்குப் பொருட்டு, போற்றுவாரின்மையே. மொழி வளர்க்கும் வழிகள் நமக்குத் தாமாகவே தோன்றாவிடின், அவற்றைக் கையாள்வோ ரிடமிருந்து கொள்ளுதல் நன்றாம். எடுத்துக் காட்டாக, தமிழ் வள்ளல்களால் நிறுவப்பட்டனவும் போற்றப்படுவனவு மாகிய பல்கலைக் கழகங்கள் நம் நாடு நிறையப் பல விருக்கின்றன. அவற்றிலெல்லாம் ஆங்கிலம், வடமொழி, எண் முதலிய வற்றில் நன்கு தேறும் மாணவர்க்குப் பரிசிலும் பதக்கங்களும் ஒவ்வொரு ஆண்டிலும் அளிக்க வெனச் சேமநிதியம் வைத்திருக்கின்றனர். தமிழ் மொழியிற் றேர்வார்க்குக் கழகந்தோறும் அவ்வித பரிசில்களேனும் பதக்கங்களேனும் மிகுதியாக அளிக்கப் படுவதை யாம் காண்கிலேம். அயல் நாட்டினவும் இறந்தொழிந்தனவுமான மொழிகளில் நம்மவர் ஊக்கம் காட்டுவதற்கு யாமொன்றுங் குறை கூறவில்லை. எனினும் 'பல்கலைக் கழகம்' எனப் பெயரிய இடமொன்றில் உயர்தனிச் செம்மொழியாய் எம்மொழிக்கும் மிகுந்தது என்று கற்றறிந்தோரேத்தும் நம்மொழிக்கு என் அதற்குத் தகச் சீருஞ் சிறப்பும் செய்தல் கூடாது? அது செய்யின் கழகங்களில் தமிழ் கற்கும் மாணவர் தொகை மிகும் என்பதற் கையமில்லை. இப்

பொழுது உயர்தர வகுப்புக்களில் தமிழ் மாணவரின் எண் விரல்விட்டு எண்ணத் தகும் எண்ணுயிருக்கின்றது. அவரும் தமது தமிழ்க் கணக்காயரிடத்துள்ள நன்கு மதிப்பைப் பற்றியே தமிழ் கற்கின்றனர் என்று சொல்லவுமிடமுண்டு. பள்ளியிற் கற்கும்போதே மாணவர் தமிழ் மணம் அறியினன்றோ அவர் பின்னர் அம்மொழியைப் பேணுவர். இதை நன்குணர்ந்து கல்லூரிகட்கென இனி நன்கொடை யளிக்குமவர் தமிழுக்கென ஒரு கூறு கொடுக்குமாறு வேண்டுகிறோம்.

மேனாட்டவரிற் கல்வியறிவாளர் யாதானுமொரு பெரும்புலவரது நூற்களிடத்துத் தமக்குப் பற்று எற்படின், அத்தகைய பண்புடையார் பலரையும் உசாவித் தேடிக் கழகம் ஒன்று நிறவுகின்றனர். அக்கழகத்தின் பெயரும் அப்புலவர் பெயரானே யமைகின்றது. எடுத்துக் காட்டாக ஆங்கில நாட்டில் சேகப்பிரியர் கழகம் (Shakespeare Society) முதலிய கழகங்களிருக்கின்றன. அவற்றின் றொழில் அப்புலவரது நூல்கள் பலவற்றைத் துருவி யாராய்தலோடு, சொற் பொழிவுகள் நிகழ்த்தி, பலவித பதிப்புகள் வெளியிடுவதே யாகின்றது. தமிழறிஞர் அவ்வாறு செய்வதற் கென்ன குறை யுண்டு? யாங் கண்டவளவில் ஒன்றுமில்லை. சங்கப் புலவர் ஒவ்வொருவரும் அவ்வவர் பெயரால் கழகம் நிறுவத் தக்க மாண்பினரே. அவரது செய்யுள்களைக் கொண்டன்றோ சிதைந்துள்ள பழந்தமிழரசர் வரலாறுகளை யொருவாறு தொகுத்தல் வேண்டியிருக்கிறது. கம்பர் கழகம் ஒன்று என் இருத்தலாகாது? அவரது இராமாயணம் படிப்பவரெல்லாம் அது நன்று நன்றென உச்சிமேற் கொள்கின்றனரே! அவரெல்லாம் ஒரு கழகம் கூட்டிக் கம்பர் பெயரை அறியாதாரும் அறியும்படிச் செய்யலாம். அவர் பிறந்த நாளைக் கொண்டாடலாம். மற்றும் இதுவரையும் வெளி வந்துள்ள கம்ப ராமாயணப் பதிப்புகளை யெல்லாம் ஒத்திட்டுப் பல பாட வேற்றுமைகளுடன் சிறந்த பதிப்பொன்றும் பதிப்பிக்கலாமே!

ஆங்காங்குச் சிறந்த புலவருக்கெல்லாம் இவ்வித கழகங்களேற்படின், ஆராய்ச்சிகள் மிகுந்து, செந்தமிழ் நூல்கள் தழைத் தோங்கும்.

இப்பொழுது வெளிவந்துள்ள தமிழ் நூல்கள் பலகாலத்தன; பல பொருளை விளக்குவன; பல்வேறுருவின. அவற்றை யெல்லாம் ஒருங்கு தொகுத்துத் தக்க பதிப்பாளரைக் கொண்டு முறையே இலக்கணம் இலக்கியம் முதலாகவும் காலவரையறையின் சீராகவும் பதிப்பிடல் வேண்டும். இப்பதிப்பில் தற்காலத்திய சுவடிகளையும் சேர்க்கவேண்டும். மற்றும் அச்சுவடிகளெல்லாம் எல்லோர்கைக்கும் எளிதில் கிட்டவுஞ்

செய்வது இன்றியமையாதது. இப்பொழுது தமிழுக்கு உண்மைத் தொண்டு பூண்டொழுகும் பெரியோர் பலரால் பேரிலக்கணமாம் தொல்காப்பியம் மூலமாகவும் உரையுடனும் வெளிவந்திருப்பதற்கு யாம் பெரிதும் மகிழ்கின்றோம். இன்னும் அச்சிலிருக்கும் நூல்களும் வெளிவரின் தமிழுலகு உய்யும்.

தமிழ், தான் நோற்றதன் பயனே என்று வியந்துரைக்கத் தக்க புலவர் நம் நாட்டிற் பலர் இருக்கின்றனர். அவர்களை யெல்லாம் அடிக்கடி ஒருங்கு கூட்டிச் சொற்பொழிவுக ளியற்றுவிக்கவேண்டும். மற்றும் ஆண்டுதோறும் அப்புலவரிற் சிலரைத் தேர்ந்தெடுத்துத் தமிழ் நாட்டிற் சிறந்த நகரங்களுக் கனுப்பி ஆங்குள்ள தமிழ் மக்கள் முன்பாகத் தமிழின் பெருமையையும், இப்போது அது அடைந்துள்ள நிலைமையையும், இனி அது தழைத்தோங்க நாமியற்ற வேண்டிய செயல்கள் பலவற்றையும் பற்றிச் சொற்பொழிவுகள் செய்விக்கவேண்டும். அவரது மொழிகளாற் கேட்டோர் பிணிக்கப்பட்டு, உண்மையை யறிந்து, தாய்மொழி யிடத்துத் தாமிழைத்த தவற்றை யுணர்ந்து, தம்மா லியன்றவளவு அம்மொழியைத் தாங்க முன் வருவர். அப்புலவர் எழுந்தருளிய பொருட்டானே ஆங்காங்குச் சங்கங்கள் ஏற்படுவதும் திண்ணம்.

அரசியற்றுறையில் முறைவிதி மன்றத் துறுப்பாளரில் பெரும்பாலோர் தமிழரே. தமிழ் வளர்த்தல் தங் கடனாகக் கொண்ட பெருந்தகையாரின் மருகர் பலர் அவருள் உண்டு. அவர் தம் தொழில் பற்றி வேற்று மொழிகளைக் கைக்கொண்டுத் தாய்மொழியை யொரு சிறிது மறந்திருக்கின்றனர் போலும். ஆனதினால் அவர் முன்பும் நமது புலவர் பெருஞ் சொற்கள் பொழியின் தங்கடமை யுணர்ந்து அவரும் வேண்டுவன செய்வர்.

இது மட்டுமே யன்றி, சென்னைப் பேரறிஞர் குழாத்துள்ளாரையும் தமிழறியச் செய்தல் வேண்டும். அவர் கல்வி முறையிற் செய்துள்ள சட்டங்களெல்லாம் தமிழ் மொழிக் கின்னல் விளைப்பனவாயிருக்கின்றன. அது தமிழறியாக் குறையோ, அல்லது வேற்று மொழிகளிடத்துள்ள அன்பு பற்றியோ யாமறியோம். எவ்வாறாயினு மாகுக! நமது கடமையை நாமாற்றுவோம்.

தனித் தமிழ்க் கல்லூரி யொன்றேனும் நமக்கில்லாதது பெருங் குறை யெனப் பலகாலும் எடுத்துக் காட்டியுள்ளோம். என்றோ அது வருநாள்? கற்றுத்துறைபோகிய பெருங்குடி மக்களாகிய நுங்களுக்குப்

பலப்பல எடுத்துரைத்தல் வேண்டியதில்லை. நீவிர் அறியாத தொன்றில்லை. அறிந்தும் ஊக்கக் குறைவால் செய்வன செய்யா திருக்கின்றீர்.

## தனிப்புகழுடைத் தமிழன்பர்காள்!

ஒரு நாடு அதனிடத்து வாழும் மக்கள் சேமித்த புகழானே விளங்குறும். அத்தகைய புகழை நோக்கின் தமிழ்நாடு எவ்வாறு உலகத்து மற்றை நாடுகளின் தொன்மையதோ அதுவே போல் புகழினும் முதனிலையுடையது. அதற்குப் பொருட்டு நமது முன்னோர் வாழ்ந்த வாழ்க்கையே! அவர் வஞ்சியாது எதிர்நின் றடுதலும், புறப்புண் ணுணு தலும், வாய்மைக் கொரு எடுத்துக்காட்டாக நிற்றலும், தமக்கென வாழாப் பெருமாண்புமே தமக்கு மேற்கோளாக் கொண்டு வாழ்ந்தனர் அவர் பெண்டிரும் கணவற் றொழுதெழுதலான் மழைவளந் தரூஉம் பெருமையராயினர். அவரெல்லாம் தமக்குப் பின் தம்புகழ் நிறீஇயது தமிழ்ப் புலவரைப் போற்றியதன் பயனே யன்றோ! மற்றைய நாடுகளில் கிடைப்பனவே போல் கட்டிட முதலியவற்றின் சிதைவுகளைக்கொண்டு வரலாறு முறையின் யாத்தலியையாத தமிழ் நாட்டில் மூவேந்தர் முறைமை யெல்லாம் முத்தமிழோர் பாவினன்றோ கிடக்கின்றது! பாரியது கொடைத்திறம் கபிலரது கொடையே! பதிற்றுப்பத்துக் கொண்ட பெருஞ் சேரர் ஒரு சிறிது கொடுத்தன்றோ தமிழுலகுள்ளளவும் நிலைத் திருக்கின்றனர். சடையப்ப முதலியார் வள்ளலாய் நமக்கு விளங்குவ தெல்லாம் கம்பரது வள்ளன்மையா லன்றோ! அத்தகைப் பெரியோரது குடியிற் றோன்றிய நாம் எத்தன்மையராயிருத்தல் வேண்டும்? எத்தன்மை யரா யிருக்கின்றோம்? நமது பெயர் எத்தனை காதம் வரையிற் செல்கின்றது? பின்னிரு வினாக்கட்கு விடையளிப்பின் வியப்பன்றோ! ஆதலின், உழுவலன்புடையீர்! உண்மைநிலை யுற்றுநோக்குமின்! மொழியீடேற்றத்தால் நமக்கும் ஈடேற்ற முண்டென்பது மறவாதே, நும்மாலியன்ற வளவு காலந் தாழ்க்காது, தமிழ்ப் பழம்பணி புதுக்குமின்! புதுப்பணிபல குயிற்றுமின்! வம்மின்! வம்மின்! பணியாற்றுவோரை ஊக்குமின்!

நலம்.

கருந்திட்டைக்குடி,
துன்மதி, தை.

R. வேங்கடாசலம்,
அமைச்சர்.

சேர்க்கை க.

உ

# கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

(காப்புப்பெற்றது.)

## திரிசிரபுரம் கிளை.

---

அமைச்சர்,

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,

தஞ்சாவூர்.

ஐயரே,

திருவருட் பெருக்கால் நம் சங்கத்தின் உறுப்பாகிய இத் திரிசிரபுரம் கிளையின் எட்டாவது ஆண்டு இரௌத்திரி, தை முதற்றொடங்கி துன்மதி, மார்கழியோடு இனிது நிறைவுற்றது.

இவ்வாண்டில் எம் இயல்புக்கும் வன்மைக்கும் தக்கவாறு யாம் தமிழ்ப் பணியியற்றலிற் றலைநின்று வந்திருத்தலை நினையுங்கால் எம் நெஞ்சம் மகிழ்ந்து குளிர்கின்றது. யாம் நம் அருமைத் தமிழ்த் தாய்க்கு இயற்றிவரும் பணியெல்லாம் எல்லாம் வல்ல இறைவன் திருவருட் பெருக்காலும், தமிழ் மொழியின் கடவுட் டன்மையினாலும், எம் மன வுறுதியினாலும் முற்றிய வென்பதன்றிப், பொருட்டுணையாலும், உயர்நிலை யுற்றார் உறவின் வலியினாலும் ஆயவென வியலாது. இன்னும் வெளிப் படைக் கூறின் பெரும் பொருளாளர் துணையும், உயர்நிலையாளர் உதவியும் யாம் பெறக் கொடுத்துவைக்கவில்லை யென்னலாம். திருவருட் பெருக்கால் இவையும் நேரில் யாம் என்செயமாட்டேம்?

### உறுப்பினர்.

இவ்வாண்டின் தொடக்கத்தில் இக்கிளை யுறுப்பினராக விருந்தார் நாற்பத்துநால்வர். புதுவதாகச் சேர்ந்தார் இருபத்தைவர். இங்கிருந்தும் பிறவூர்களுக்குச் சென்றார் இருவர். பிறவூர்களிலிருந்தும் இங்குவந்து சேர்ந்தார் இருவர். எனவே, ஆண்டின் கடையில் இக்கிளை யுறுப்பின ராகவுள்ளார் அறுபத்தொன்பதின்மர்.

'சிதலை தினப்பட்ட ஆல மரத்தை, மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்கு' பருவத்தில் தமிழ் மொழியை அதன் பண்டைய உயர்நிலைக்குக்

கொண்டுவருதற்குரிய தமிழ் மாணவரிற் சிலர் இவ்வாண்டில் தமிழ் மொழியின் சிறப்பினையும் தாம் அதற்கு ஆற்றக் கடமைப்பட்ட பணியையும் உணர்ந்து, நம் சங்க உறுப்பினராய்ச் சேர்ந்திருக்கும் செய்தியை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றேம்.

## கூட்டங்கள்.

